# நினைவு மலர்



25.03.2012

அமரர்

## வைத்திலிங்கம் சந்திரபாலன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்து எடுத்தியம்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'



**தோற்றம்**
**08.12.1946**

**மறைவு**
**31.01.2012**

அமரர்

# வைத்திலிங்கம் சந்திரபாலன்

அவர்கள்

## திதிவெண்பா

சீர்பெருகும் கரவருடத் தைத்திங்கள் பதினேளாம் நாள்
பார்மகிழும் குருவாரம் பூர்வபக்க அட்டமித் திதிதனில்
பேர்விளங்கும் பெரியோன் சந்திரபாலன் பூதவுடல் களைந்து
நேர்விளங்கச் சொர்க்கம் சென்ற நாளாம் இஃது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# வைத்திலிங்கம் சந்திரபாலன்

அவர்களது இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

## 25.03.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஏழ்மை

நிலையை உணர்ந்து - பட்டப் படிப்பை

தொடராமல் பகுதி நேரப்படிப்பை தொடர்ந்து

எங்களிருவரையும் சரியான

முறையில் வழி நடாத்தி

பொருளாதாரத்தின் மேன்மை

அடைய வழிகாட்டிய

எங்கள் சகோதரன் சந்திரபாலனுக்கு

இந்நூல் சமர்ப்பணம்.

அன்புச் சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

குனித்த புருவமும கொவ்வைச் செவ் வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணிறும்
இனித்த முகமுடைய எடுத்தபொற் பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மானிலத்தே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சால
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கென பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக் கரையிலா கருணை மா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத் திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங் குளிரவென் கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# வைத்திலிங்கம் சந்திரபாலன் அவர்களின்
# வாழ்க்கைச் சுவடுகள்

பளை, தெல்லிப்பழை என்னும் சிற்றூரில் வாழ்ந்து வந்த செல்லப்பா வைத்திலிங்கத்திற்கும் உரும்பிராய் சின்னத்தம்பி புதல்வி ஆச்சிமுத்து வுக்கும் மூத்தபுத்திரனாக 1946ஆம் ஆண்டு 12ஆம் மாதம் 8ஆம் திகதி பிறந்தார்.

சிறுவயதிலிருந்தே வீமன்காமம் மகாவித்தியாலத்தில் கல்வியயின்று பின் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் (கட்டட ஆலோசனை B.c3 டிப்ளோமா பட்டம் பெற்றபின் ஆரம்பத்தில் அளவெட்டி கணேசரத்தினம் சகோதரர்களுடன் ஒப்பந்தகாரரிடம் தொழில் தொடங்கினார். பின் மனோகரன் அன் வெற்றிவேல் சிறுவனத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளராக தொடர்திருந்தார். குறிப்பாக யாழ் பல்கலைக்கழக மருத்துவ கட்டடம் முதன்மை பெற்றது.

இக்காலத்தில் கொக்குவில் பரம்சோதி சிந்தாமணி தம்பதிகளின் இரண்டாவது மகளான மகேசுவரியை திருமணம் புரிந்து சங்கீதா, சாமந்தி, சாளினி ஆகிய மூன்று புத்திரிகளைப் பெற்று இன்புற்றிருந்தவேளையில் வாழ்க்கையின் பேரிடியாக மனைவி காலமானர். பின் பிள்ளைகள் பெரிய தாயாரின் அரவனைப்பில் வளர சகல உதவிகளையும் செய்து வந்தார்.

வரும் காலத்தில் தனது சிறியதகப்பனாரின் மகள் கீதாவும், தகப்பனாரையும் சேர்த்து பார்த்து வந்தார். பின் கீதா திருமணம் முடித்து கனடா புறப்பட்டபின் தந்தையாரும். தானுமாக தனியே வாழ்ந்து வந்தார் இந்நாளில் 2012இல் ஆண்டு 1ஆம் மாதம், 31ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குருமயம்

# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
## MAVIDDAPURAM SRI KANTHASWAMY TEMPLE

மஹாராஜஸ்ரீ
து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்
ஆதீன கர்த்தா - பிரதமகுரு,
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை,
ஸ்ரீலங்கா

TP: 021 3210349

Maharajasri:
D.S.Ratnasabapathy Kurukkal
Governing Authority & Chief High priest
Mavai Aadheenam,
Maviddapuram,
Tellippalai.
Sri Lanka.

காலம் காலமாக மாவைக் கந்தப்பெருமானின் நிழலிலே அளப்பரிய தொண்டுகள் செய்து வந்த பரம்பரையிலே தோன்றிய செல்வமணிகள் வைத்திலிங்கம் பரம்பரைக் குடும்பத்தினர். இவர்கள் வழித்தோன்றல் சந்திரபாலனின் மறைவு மாவை ஆதினத்திற்கும் மாவை வாழ் பளை வாழ் மக்களுக்கும் பெரும் இழப்பாகும். கேள்வியுற்றநாள் முதல் நாமனைவரும் பெரும் கவலைக்குள்ளா கியுள்ளோம். அன்னாரின் பொதுப்பணிகள், செயலாற்றல்கள் பெரும் எதிர்ப்புகள் மத்தியிலும் துணிந்து நின்று செயற்பட்டதை யாரும் மறக்கமுடியாது மறைந்த சந்திரபாலனவர்களின் ஆன்மாவை ஏதோ ஒரு பிறவியெடுத்து மீண்டும் பொதுப்பணிகள் தொடரவும் மாவைக்கந்தனின் பணிகளைத் தொடரவும் எல்லாம் வல்ல மாவை முருகப்பெருமானைப் பிரார்த்தித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய முருகனைஆராதிக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**பிரம்மஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக்குருக்கள்**
**ஆதீனகர்த்தா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாளில் மறக்க முடியாது

சந்திரபாலன் அவர்களை வாழ்நாளில் மறக்க முடியாது. அவர் பிறந்தநாள் தொடக்கம் அவரை எமக்கு தெரியும். அவருடைய கல்வியும் தொழிலும் சேவையும் மறக்க முடியாது. எமது ஆலயத்தில் எந்த ஒரு திருப்பணி வேலையாய் இருந்தாலும் அவர் வந்து பார்த்து அதற்கேற்ப திருத்தங்கள் செய்வார். அவர் தலைசிட்டி ஞானவையிரவப் பெருமான் மீது மிகவும் பக்திகொண்டவர். அவர் தந்தையார் எந்தக் கோயிலுக்குப் போக வேண்டுமோ அதை உடன் நிறைவேற்றி வைப்பார் தன் நண்பர்களுக்கு தேவையான உதவிகளை செய்வார்.

அவரை எம்மால் மறக்க முடியாது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இராஜஇராஜேஸ்வரி அம்பாளையும் தலைசிட்டி ஞான வைரவப் பெருமானையும் பிரார்த்திக்கின்றேன்.

**மாவிட்டபுரம் – வீணியவரை**

**ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்,**

**பிரம்மஸ்ரீ அ.துரைச்சாமி ஐயர்,**

**தேவஸ்தான பிரதமகுரு. நிர்வாகஸ்தர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரபாலன்...
# நண்பனாய் .... சோதரனாய்....
# மறக்க முடியாத மனிதனாய்...

1970களில் அந்தி மயங்கும் ஒருமாலைப் பொழுது. விவசாயிகளுடன் களிக்கும் பொழுதே கடமையாக கொண்ட விவசாய உத்தியோகத்தனாக நான். வீமன்காமத்தில் பளை கூத்தியவத்தை குறிச்சியில் என் கடமை நிமிர்த்தம் ஒரு சந்திப்பு. கூட்டத்தின் மத்தியில்... அழகான இளைஞன். நேர் கொண்ட நடை நிமிர்ந்த பார்வை எனும் பாரதியின் வரிகளுக்கு பாத்திரமான தோற்றம். கல்விக்களை பொழியும் அழகிய வதனம். கனிவான அறிவுபூர்வமான பேச்சு கணப்பொழுதில் என்னைக் கவர்ந்த ஆளுமை.. அன்றைக்கு அறிமுகமாவதற்காக எனது அம்மாவும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர் என்ற உரையாடலுடன் ஆரம்பமான நட்புகாலம் கடந்தும் கனதியானதாக தொடர்ந்து பல தசாப்பதங்களை தாண்டி நீண்டு இன்று நெஞ்சில் கனதியாக அழுத்தும் பிரிவுடனும் நினைவில் நீங்காது தொடர்கின்றது.....

ஒரு மனிதனிடம் இத்தனை திறமைகளா என எண்ணி வியக்கும் பல்வகைப் பரிமாணம் ஆற்றல் மிக்க தொழில்நுட்பவியலாளன்.... ஆளுமைமிக்க நிர்வாகி... கலை நுட்பம் தெரிந்த தேர்ந்த கட்டடக் கலைஞன். திறன்கள் பல கொண்ட பொறியியலாளன்.. எல்லாவற்றுக்கும் மேலாக எவருக்கும் எந்த நேரத்திலும் எதற்காகவும் அடிபணியாத கடமையுணர்வு.... தான் சார்ந்த சமூகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று எக்கணமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கும் சேவை மனப்பாங்கு... என ஒரு மையத்தில் குவிந்திருந்த தனித்துவங்கள் அத்தனைக்கும் சொந்தக்காரன் ஒருவன் என் நண்பன் என்பதை பலரிடம் கூறி பெருமைப்பட்ட பொழுதுகள் என் ஞாபக அலைகளில் மீள் எழுகின்றது...

ஆற்றல்களின் கருவூலமான அவரிடம் நிர்மாணத் துறையில் முத்திரை பதித்த மனோகரன் அன் வெற்றிவேல் கம்பனியின் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. நிர்வாகத்துக்கு கட்டுப்படுவதை விடுத்து தனகக்கு நிர்வாகத்தை கட்டுப்படுத்தும் வெற்றியின் இரகசியம் அங்கு இந்த மனிதனின் ஆளுமையின் விளைவாக நிரூபிக்கப்பட்டது. தனக்கு கீழ் பணிபுரியும் அத்தனை ஊழியர்களின் தொழில் விடயங்கள் தொடக்கம் தனிப்பட்ட விவகாரங்கள் வரை துணைநிற்கும் தோழமை மனப்பாங்கு, மதிப்புமிக்க மனிதனாக இதயங்கள் பல வென்ற வெற்றியாளனாக அவரை இறுதிவரை வாழ வைத்து இறப்பின் பின்பும் வாழ்விக்கின்றது.

இடமறிந்து செயற்படும் மதிநுட்பம்.. நில மறிந்து கட்டடம் அமைக்கும் தொழில்நுட்பம் தேவையறிந்து செயலாற்றும் திறன் என்பவற்றோடு கண்டிப்பான போக்கும் கடமையுணர்வும், நேரத்துக்கும் நிகழ்வுக்கும் ஏற்ற கோலவுடையும் அவரை பல நெஞ்சங்களில் நிறைவாக உட்காரவைத்தது.

விதியின் கோலம் இல்லறத்தின் பாதி வழியிலேயே துணைவியை பறித்துவிட பிள்ளைகளின் வளர்ச்சியும் எதிர்காலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது கரங்களில் மட்டுமே வந்து நின்றது. இளமையில் மனைவியை இழந்த போதும் அறநெறி பிறழாத செம்மை மற்றவர்களின் மதிப்பார்ந்த கௌரவத்தை அவருக்காக்கியது கடந்த பாதைகள் தோறும் சவால்களும் துயரங்களும், துன்பங்களும் சோதனைகளை சாதனைகளாக்கிய ஆற்றல்... தான் வரித்துக் கொண்ட கொள்கையில் பின்வாங்காத பிடிவாதம்... பொதுப்பணிகளில் வரும் பிரச்சினைகளை துணிவோடு எதிர்கொண்டு வெற்றியாக மாற்றும் வினைத்திறன் சந்தர்ப்பவாதம் அற்ற சாதுரியம் என்பனவெல்லாம் வித்தியாசமான மனிதனாக இவரை மற்றவர்களிடம் இருந்து தனித்துவப்படுத்தியது.

ஓடி உழைத்து களைத்தாலும் ஓய்வுநேரங்களையும் மற்றவர்களுக் காக்கிய மகத்துவமான வாழ்வு இவருடையது... தனது தமிழ் புலமையையும் ஆங்கில ஆற்றலையும் அடுத்த சந்ததியிடம் கையளிக்க தன்னை ஒரு ஆங்கில ஆசிரியனாக மாற்றிக் கொண்டு பல இளைஞர் யுவதிகளுக்கு பயன்மிக்கதாக தனது மாலை நேரங்களை மாற்றிக்கொண்ட மனிதன்

எங்கள் அளவெட்டி மண்ணின் முக்கியமிக்க கட்டடங்களான மகாஜன சபை மற்றும் சற்குரு சிவாய ஸ்ரீ சுப்பிரமுனியசுவாமிகள் கலாசார நிலையம் என்பனவற்றை திருத்தியமைக்க முயன்ற வேளையில் எங்கள் நிதிநிலையறிந்து வரைபடங்களை வரைந்து தந்த வள்ளல் மனப்பாங்கு மறக்க முடியாத மனிதராக இவரை எங்கள் சபை உறுப்பினர்கள் மத்தியில் ஆக்கி வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ கனதிகளை சொந்தமாக கொண்ட இந்த மனிதன் தலைக்கனம் மட்டும் கொண்டிருக்கவில்லை. எளிமையும் நட்புறவும் தனக்கான அணிகலனாக கொண்ட இந்த அற்புதம் தினம் தான் நினைந்தேத்தும் மாவைக் கந்தனின் மலரடிகளை சென்றேகிய போது அவரது குடும்பம் மட்டுமன்றி அவர் வழித்தடம் தொடர்ந்த பல மனங்களும் துயரத்தால் துவண்டு போனது..

ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் மண்மேல் வரார் என்ற சேதியுணர்ந்து தேறுதல் அடைவதுடன் அவரது குடும்பத்துக்கு எமது ஆறுதலை வார்த்தைகளில் பகர்ந்தாலும் சில மனிதர்களின் இழப்பு என்றும் வெற்றிடம் தான்... நல்ல ஆத்மா என்றும் வாழும்.. ஆண்டவன் தாழ்களில் அவர் அமைதி துயில் கொள்ள பிரார்த்திப்போம்.

**தலைவர்**
**வை.சுப்பிரமணியம்,**
**அளவெட்டி மகாஜன சபை மற்றும்,**
**சற்குரு சிவாய ஸ்ரீ சுப்பிரமமுனியசுவாமிகள்**
**கலாசார நிலையம்**

ஒருநொடி துணிந்தால் இறந்துவிடலாம்
ஒவ்வொரு நொடியும் துணிந்தால் நாம் ஜெயித்து விடலாம்.

நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன
ஆனால் அனுபவமோ
தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது - பில் கேட்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி குடும்பத்தினர் புலம்பல்

எம்மை ஆளாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புச் சகோதரருக்கு முதற்கண் எங்களது துயரம் தோய்ந்த கண்ணீர் அஞ்சலிகள்.

பொது நலமும், நற்குணமும் கண்ணியமும் வைராக்கியமும் உள்ளவராய் இப் பூமியில் திகழ்ந்தார். அளப்பரிய பொதுச் சேவைகளையும் செய்து வந்தீர்கள் இவைகளை ஆண்டவன் கூட அறியாது தன்னிடம் சேர்த்துக் கொண்டார். நீதி எங்கே நியாயம் எங்கே யாரிடம் போய் அண்ணா நியாயம் கேட்போம். ஆரம்பகாலம் தொடக்கம் அடி பணித் தொழில்தான் செய்வேன் என்றிர்கள் அதன்படியே நடந்தீர்கள் ஆனால் காலம்தான் குறுக்கே வந்து விட்டான். யாரால் தான் அண்ணா தடுக்க முடியும்.

பெற்ற தாயையே முதலில் இழந்தீர்"கள் அடுத்து தாரைவார்த்துத் தந்தவர்கள் தடுமாறிவிட்டார்கள் தாரத்தையே இடையில் இழந்தீர்கள். அதுமட்டுமா அண்ணா! பெற்ற பிள்ளைகளே பின் கதவால் சென்று மறைந்து விட்டார்கள் வாழ்க்கையில் எது தான் உங்களுக்கு நிலைத்தது? காலத்தின் மாற்றமா விதியின் விளையாட்டா யாரிடம் சொல்லி ஆறுவோம் அண்ணா. வாழ்நாள் முழுவதும் நாங்கள் வருந்தவா எங்களுடன் கூடப் பிறந்து இடையில் மறைந்தீர்கள் உங்களுடைய கடுமையான வருத்த காலத்திலும் எனது வருத்தத்தைச் சொல்லிக் கவலைப் பட்டீர்களே யாருக்கண்ணா இதை சொல்லி ஆறுவோம். எவருக்கு என்ன தீங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தீர்கள் யார் குடியைக் கெடுத்தீர்கள் ஏன் இந்த நிலை வந்தது. "ஏழ்மை நிலை வந்தால் நேசர் யாருமில்லை" என்பார்கள் அதுபோல் உங்கள் வாழ்க்கையும் முடிந்து விட்டது. இறுதியில் தனிமரமாகி விட்டீர்கள். அரவணைக்க வேண்டியவர்கள் கைவிட்டநிலையிலும் உடன் பிறவாச் சகோதரி கீதா (கௌரி) முட்டுக் கொடுத்தது போல் துணை நின்று செயற்பட்டார். அதுகூட அதிகநாள் நிலைக்கவில்லை. காலத்தின் மாற்றத்தால் அவளும் கடல் கடக்க வேண்டி ஏற்பட்டது. பின்பும் தனிமையாக்கப்பட்டீர்கள்.

இறுதியில் அப்பாவும் மகனும் வாழும் வாழ்க்கை உருவானது அப்பாவை அனுசரித்து செய்த பணிவிடைகளை பாராட்டாதவர்கள் இல்லை அப்பாவுக்கு நாங்கள் செய்யும் பணிவிடையில் எங்கள் இருவருக்கும் கூட அண்ணா உங்களது பொறுமையில்லை. இதை என்றுமே கதைப்போம் உங்களின் மறைவால் அப்பாவும் தனிமையாக்கப்பட்டு விட்டார் அப்பா வாழ்க்கையின் கடைசி கட்டத்தை அடைந்தும் காலன் அவரை அழைக்கவில்லை. உங்களை ஏன் அழைத்தாரோ தெரியாது. அண்ணா அண்ணா என்று எத்தனை நாட்கள் தான் அழுது ஆறுவோமே இறைவா? எழுதாத விதிக்கு அழுதால் தீருமோ அண்ணா மானிடத்தில் விதியை வென்ற மனிதர் யாருமில்லை அதை அறிந்தும் மனம் ஆறுது இல்லை அண்ணா.

உங்கள் பிரிவால் வருந்தும் அன்புத் தம்பி குடும்பத்தினர்.

**வை.பாக்கிநாதன், லீலா, சஞ்செயன்,**
**கஸ்தூரி, கௌசிகன், கீர்த்திகன், அன்புச்சகோதரி கீதா,**
**ரஞ்சித் குடும்பத்தினர், சேயோன், சங்கரி (கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்..

ஒருவனுக்கு மரணம் ஒருபோதும் முடிவுரையல்ல. அது தொடர் கதை போன்றது. பிறந்தவர் இறப்பது நியதி என்றால் இறந்தவர் பிறப்பதும் சாத்தியமே. இந்த விலக்கொணாச் செய்திக்கு வருந்துதல் முறையோ என கீதை பகர்கின்றது.

மனிதவாழ்வு முன்னும் பின்னும் கிழிந்த புத்தகம் போன்றது. பிறப்புக்கு முன்னால் எது நடந்தது என்று எவருக்கும் புரியாது. இறந்த பின்னாலே எதுதான் நடக்கும் என்பதும் யாருக்கும் தெரியாது. எனவே இடையில் நாம் முன்னும் பின்னும் தெரியாமல் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம்.. அதற்குள்ளேயே உறவுகள் நட்புகள் எதிரிகள் பந்தபாசம் எல்லாமே அடங்கும். அவை அனைத்தும் இங்கேயே பெற்றவை.

இடையே நடக்கின்ற இந்த நாடகத்தில் நாம் எல்லோரும் நடிகர்களே. இங்கே வந்து பிறந்துவிட்டோம் பந்தம் வளர்த்து விட்டோம் . இறைவன் ஆட்டுவிக்கின்றார். நாம் நடிக்கின்றோம் அவ்வளவுதான். ஆத்மா பிரிந்தால் வேஷம் கலைந்துவிடும். அப்புறம் பந்தம் வளர்த்தவர்கள் நன்றியை வெளிப்படுத்தி சடங்குகள் சம்பிரதாயங்கள் நடத்துவார்கள். எவனோ ஒருவன் மரணம் அடைந்துவிட்டால் உறவுகள் அல்லாதோர் அவனுக்கு சடங்கு சம்பிரதாயங்களை நிகழ்த்துவதில்லை. அவன் வாழ்ந்த வாழ்க்கையை எண்ணிப் பார்க்கிறார்கள். அவ்வளவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களின் தொகுப்பே மனம். மனதினில் பதியும் போது புத்தி சீர் தூக்கிப் பார்க்கின்றது. அதுவே நல்லவன் கெட்டவன் என்பதைத் தீர்மானிக்கின்றது. அப்போது அவன் வாழ்ந்த வாழ்க்கை அவர்களிடையே கல் மேல் எழுத்தாகின்றது.

ஒருவன் வாழும்போது தன்னைச் சுற்றி ஒரு நூல் வேலி அமைத்து அதனை அவனே அறுத்திடாமல் வைராக்கியமாய் வாழ்ந்து வந்தால் மற்றவர்களால் போற்றப்படுவான். மஹா பாரதத்தில் கர்ணன் வைராக்கியத்துடன் நட்புக்கு நூல்வேலி போட்டு கொடைக்கு அவனுக்கு நிகர் அவனே எனவாழ்ந்து காட்டினான் அவ்வாறு பீஷ்மர் பிரமச்சாரியத்துக்கு நூல்வேலி போட்டு வாழ்வில் வாழ்ந்துகாட்டியதால் அவர்கள் மறைந்த பின்னரும் யுகம் யுகமாய் தொடர்ந்து அவர்கள் பெயர் நிலைத்து நிற்கின்றது. அவ்வாறுதான் வரலாற்று நாயகர்கள் வாழ்ந்தார்கள். அதை விடுத்து வாழ்க்கைக்கோ அரசியலுக்கோ மற்றும் வேறு எதனாலோ சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வாழ்ந்தால் அவர்கள் மறைவதோடு அவர்கள் கதையும் முடிந்துவிடும்.

எது எவ்வாறாயினும் மனிதபிறப்புக்கும் அவனது முன்னைய பிறவிக்கும் அவனது செயலின் தொடர்பு நிச்சயமானது. முன்னைய பிறவியின் கர்மாக்கணக்கு அடுத்த பிறவியிலும் தொடரும். அதனையே வள்ளுவரும் ஒருமையிற் தான் கற்றகல்வி எழுமையும் ஏமாப்புடைத்து என்று ஒரு குறளிலும் ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் எழுமையும் ஏமாப்புடைத்து என பிறிதொரு குறளிலும் மொழிந்தார். எனவே ஆத்மாவுடன் கற்ற கல்வி முதல் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிய நன்மை தீமைகள் அனைத்தும் தொடர்ந்து வரும். இவற்றை எண்ணி வாழ்ந்தால் அடுத்தவர் நலத்தில் வாழ்ந்திடத் துடிக்கும் ஆத்மாவிற்கு ஆயுள் முழுவதும் நன்மை பயக்கும். இந்தப் பிறவியில் நன்மைகள் பல செய்தால் அது அடுத்த பிறவியில் நல்ல தொரு வாழ்க்கைக்கு வித்திடும்.

இந்தவகையில் ஆத்மா சதோ, இரஜோ,தமோ ஆகிய மூன்று குணங்களைக் கொண்டது. ஆரம்பத்தில் ஆத்மா சதோகுணமாக இருந்து ஆசையின் விளைவால் அடுத்தடுத்த பிறவிகளில் தமோகுணத்தை அடைகின்றது. தமோகுணத்தைக் கொண்ட ஒருடவனிடம் அடுத்தவர் நலத்தை எதிர்பார்க்க முடியாது. அவர்கள் பாவகாரியங்கள் செய்வதில் கிஞ்சித்தும் தயங்கமாட்டார்கள். ஆனாலும் மனிதப் பிறவி மீண்டும் சதோபிரதான் நிலை அடைந்து இறைவனை அடையும் அப்பொழுதுதான் அவன் பரிபுரண நிலையை அடைகிறான். இதனையேதிதி நிர்ணயம் செய்கின்றது. இன்ன திதியில் மரணித்த ஒருவன் நேரடியாக சொர்க்கம் அடைவான் என்றுவேதம் பகர்கின்றது. இறைபதம் அடைவதற்கும் நாம் இங்கு இயற்றும் கருமங்கள் துணைநிற்கும்.

அந்தவகையில் அமரர் சந்திரபாலன் இவை அனைத்துக்கும் சொந்தக்காரன்.

- அன்னார் அடுத்தவர் நலத்தில் அக்கறை கொண்டு சமூகத்தில் நடக்கும் தவறுகளை அவ்வப்போது பத்திரிகைகளில் சுட்டிக் காட்டி சமுதாயத்தை நெறிப்படுத்த தவறியதில்லை.
- தனக்கென நூல்வேலி அமைத்து அதில் வைராக்கியம் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனுக்கு ஒருத்தி என்று நெறிதவறாமல் வாழ்ந்து காட்டியவர்.

- தேடல் உள்ளவனுக்கே வாழ்வில் சுவையிருக்கும் அந்த அளவிற்கு அறிவுப்பசிக்கு சேர்த்தவை ஏராளம் மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டவைதாராளம்.
- ஆங்கில அறிவை மாணவர்களிடையே புகட்டுவதில் தனித்துவம் கொண்டவர் அதுவே ஏழைமாணவனானால் இலவசக் கல்வியை புகட்டியதில் பலர் சான்றுகளாக வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள்..
- தேவையற்று எவரிடமும் கடமைப் படாத வைராக்கியம் கொண்டவர்.
- வெண்மை ஆடை அணிவதில் அலாதிப் பிரியம் அந்த அளவிற்கு உள்ளத்தையும் பார்த்துக் கொண்டார்.
- கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி எல்லா உயிரும் தொழும் என்பதற்கொப்ப மாமிசம் புசிக்காமல வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தவர்.
- காலத்திற்கேற்ப அரசியல் இலாபம் தேடாது ஒரேபாதை ஒரே வழி எனவாழ்ந்தவர்.
- பாடசாலை நாட்களில் துடிப்புடன் நடந்து பாடசாலைத் தலைவனாக இருந்து வழி நடத்தியவர்.
- உறவுகளின் துணையிழந்த வயோதிப தந்தைக்கு உறுதுணையாக இறுதி வரை வாழ்ந்து வந்தவர்.
- தான் பிறந்த மண்ணில் குடிகொண்டிருக்கும் மாவைக் கந்தன் மீது அளவற்ற பக்தி கொண்டவர்.
- தனக்கென ஒரு வீடுகட்டி வாழ்ந்த போது நாட்டின் யுத்தம் காரணமாக அதன் அமைவிடம் செல்லமுடியாமல் இருந்த போதிலும் திருமணத்தால் வந்த வீட்டையும் மனப் பூர்வமாக திருப்பிக் கொடுத்து வாடகை வீட்டில் வாழ்ந்த வைராக்கியம் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தாம் வாழ்ந்த மண்ணில் இருந்து புலம் பெயர்ந்த மக்களிற்காக குரல் கொடுத்து அவர்களை மீண்டும் மாவிட்டபுரத்தில் குடிய மர்த்த அயராது செயற்பட்டவர்.
- தலைநகர் கொழும்பிற்கு பிரயாணம் மேற்கொண்ட வேளையில் தானே உணவு சமைத்து உணவில் தூய்மையை கடைப்பிடித்தவர். உணவு சுத்தமானால் வாழ்க்கை நெறி உன்னதமாக அமைந்துவிடும் என்பதில் வைராக்கியம் கொண்டவர்.
- அளவெட்டி சனசமூகநிலையத்துடன் தொடர்பு கொண்டு அங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சியை ஏற்படுத்தியவர்.
- தான் பெற்ற அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் ஆலாதி பிரியம் இருப்பது போன்று மற்றவர்கள் மூலமும் கிடைக்கப் பெறும் அறிவுத்தேடலில் ஆர்வம் கொண்டவர்.
- கட்டடக் கலைநெறிப் படுத்தலில் அடுத்தவர் தவறினைசுட்டிக் காட்டுவதில் என்றுமே பின் நின்றதில்லை.
- தமது கௌரவம் எந்தவேளையிலும் பாதிக்கக் கூடாது என்பதில் கண்ணியம் காத்தவர்.
- இளமையில் நல்லதொரு படித்த பயிர்செய்கைக்காரனாக பெயர் பெற்றவர். தக்காளி ஏற்றமதி தலைநகர் கொழும்பிற்கு அனுப்புவதில் தமது ஊருக்குள் பிரபல்யமாக திகழ்ந்தவர்.

**திரு.ச.நடராஜா**

**முகாமையாளர்,**

**சிற்றிஸன் டிவெலெப்மெண்ட் பிஸினஸ் பைனான்ஸ் PLC**

**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பொறியியலாளர் வைத்திலிங்கம் சந்திரபாலனுக்கு எனது இதயத்திலிருந்து பதிர்வுகள்

அமரர் வைத்திலிங்கம் சந்திரபாலனும், நாமும் வரலாற்று ரீதியாக சிறப்பு மிக்க மாவிட்டபுரத்தில் பிறந்து ஒன்றாக பழகி உறவு கொண்டாடிய காலத்தை மீள நினைத்துப் பார்க்கின்றேன்.

ஆரம்பக் கல்வியை மாவிட்டபுரத்தில் வீமன்காமம் ஆங்கில மகாவித்தியாலயத்தில் கற்று, பின்னர் கட்டிடக்கலை தொழில் நுட்பகல்வி பெற்ற அமரர். தமது இளமைக்காலத்தில் தலைசிட்டி வைரவர் ஆலயம் மற்றும் மாவைக் கந்தன் ஆலய மகோற்சவ காலங்களில் தொண்டாற்றிய காலங்களை நினைவில் இருத்தி அந்த நாட்கள் மீண்டும் வரவேண்டும் என எதிர்பார்த்திருந்த வேளையில் அந்த எண்ணம் நிறைவேற முன்னரே அமரத்துவம் அடைந்தது வேதனைக்குரியது.

எனது ஊருக்கே உரிய வகையில் அமரர் சந்திரபாலன் தந்தை செல்வநாயகம் உருவாக்கிய இலங்கை தமிழரசுக் கட்சியில் அடிமட்ட ஆதரவாளராகவும் தொண்டராகவும் தமது இறுதி நாள்வரை இருந்து வந்துள்ளார்.

இவர் கட்டிடக் கலையில் தேர்ச்சிபெற்று பொறியியலாளராக செயற்பட்ட காலத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், அரச திணைக்கள கட்டிடங்கள் மற்றும் சமூக நோக்கம் கொண்ட கட்டிட அமைப்புக்களுக்கு ஆலோசனை வழங்கி நெறிப்படுத்தினர் என்பதை அறியக் கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது மக்களின் நலன் சார்ந்த பல்வேறு கலந்துரையாடல்களில் பங்கேற்று தமது கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் இவரது ஆற்றல் குறிப்பிடத்தக்கது. மேலும் இவரது ஆங்கில அறிவும் சிறப்பான அவரது செயற்பாடுகளுக்கு உதவியாக விருந்ததை காணக் கூடியதாக விருந்தது.

தாம் பிறந்த ஊருக்கு மீண்டும் சென்று வாழ வேண்டும் என எண்ணிய போதும், திடீரென நோய் வாய்ப்பட்டு இவர் அமரத்துவம் அடைந்த போதும் அவரது ஆன்மா மாவைக்கந்தன் திருவடியில் அமைதி பெறும் என நம்பிப் பிரார்த்திக்கின்றேன்.

ஒரு நல்ல மனிதனின் மறைவு சமூகத்துக்கும் அவரது குடும்பத்திற்கும் இழப்பேயெனினும் நல்வழி வாழ்ந்த அன்னாரது ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறேன்.

C.V. KANDIYA SIVAGNANAM, ACIS, J.P.
Chartered Secretary
Rtd. Municipal Commissioner
Justice of the Peace
Regd. No. 97/10/NE/JA/A/1735

**C.V கந்தையா சிவஞானம்,**
**சமாதான நீதிபதி,**
**முன்னாள் ஆணையாளர்,**
**யாழ். மாநகரசபை.**

* **நம்பிக்கையை இழந்து விடாதீர்கள். விடிவெள்ளிக்குச் சற்று முன்பு இருட்டு வெகுஅதிகமாக இருக்கின்றது.**

**- தோமஸ் புலவர் -**

* **வாலிபம் தனில் வித்தை கற்க வேண்டும். கற்ற வழியிலே நிற்க வேண்டும்**

**- அளப்பனீ சுரசதகம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரபாலன் மாமா... நினைவுகள்

எமது நிறுவனத்தின் நீண்ட பயணத்தில் நெடுங்காலமாக பயணித்த மனிதர் அப்பாவின் நண்பராக எமது நிறுவனத்தின் வேலைத்தள முகாமையாளராக பின்னர் பொது முகாமையாளராக என்று பல பரிமாணங்கள் அவருக்கு ஸ்ரீ அங்கிள் என்று பலவாறு பலர் பெயரிட்டு அழைத்தாலும் எப்பொழுதுமே எங்களுக்கு அவர் சந்திரபாலன் மாமா தான். எமது நிறுவனம் தொடங்குவதற்கு முதல் அப்பா பயிலுனராக இருந்த காலம் தொடர்பான நட்பு அப்பா இறந்த பின்பும் அம்மாவிற்கும் எங்களுக்கும் இறுதிவரை உறுதுணையா நின்றார்.

அவரது கம்பீரமான தோற்றமும் பண்பும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற பேச்சும் , குணமும் அவருக்கே உரித்தானவை. நாங்கள் எப்பொழுது யாரை நீண்டகாலத்திற்குப் பின் சந்தித்தாலும் வழமையான விசாரிப்புக்களுக்கும் பின்னர் அனைவருமே உங்களுடைய ஸ்ரீ அங்கிள் எப்படி இருக்கிறார் என்று கேட்பார் தான் மட்டுமன்றி அனைவருமே வேலைக்கேற்ற முறையில் உடையணிய வேண்டும் என்று அறிவுறுத்திக் கொண்டே இருப்பார். அவரிடம் பேச்சு வங்கி வீட்டிற்குப் போய் உடைமாற்றி வந்தவர்களும் இருக்கிறார்கள்.

அவரது துறைசார்ந்த ஆழமான தொழில்நுட்பஅறிவும் ஆங்கிலப் புலமையும் இன்று மிகச்சிலரிடையே காணக்கூடியதாக இருக்கிறது. அந்த வெளி என்று இட்டு நிரப்பமுடியாது.

நோய்வாய்ப்பட்டிருந்த கடைசிக்காலங்கள் மிகவும் துன்பகரமானவை, அவ்வளவு கம்பீரமான ஒரு மனிதர் வைத்தியசாலையில் இருந்த நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரையுமே கலங்க வைத்தது. சந்திரபாலன் மாமா மீண்டும் வருவார் என்ற நம்பிக்கை மெல்ல மெல்ல எம்மை விட்டுப்போனது.

எல்லோரது சுக துக்கங்களிலும் எப்போதும் முன்னின்றவர் யாருடைய மரணச்சடங்கு என்றாலும் எவ்வளவு தொலை தூரம் என்றாலும் முதல் மனிதனாக போய் நிற்பார் அவரது இறுதிக்கிரியைகளுக்கு நிற்க முடியாமல் போனது போன குற்றஉணர்வு எம்மை இப்பொழுதும் துரத்திக்கொண்டு இருக்கிறது.

சமூக அக்கறையும் ஆழ்ந்த புலமையும் கொண்ட ஒரு நல்ல மனிதரை எமது யாழ்ப்பாணச் சமூகம் இழந்து விட்டது இது பேரிழப்புதான் ஆனால் அவரது குடும்பத்திற்கு இது எத்தகைய இழப்பு என்று எம்மால் உணரமுடியாது அதிலும் அவரது இழப்பு ஈடுசெய்யமுடியாது அவர் இல்லாத வாழ்வை எதிர்கொள்வதற்கான தைரியத்தையும் சந்திரபாலன் மாமாவே கொடுக்க வேண்டும்.

**மனோகரன் அன் வெற்றிவேல்**
**கட்டட ஒப்பந்தகாரர்**

---

பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ
அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே.

தீங்குகளை மண்ணில் எழுது
நன்மைகளை சலவைக் கல்லில் எழுது

மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
கடவுள் நினைப்பதில்லை பாவம் மனிதன் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய அண்ணாவே!

என் அம்மாவைப்போல் பாசத்தோடு வளர்த்தீர்கள்! நான் நன்றாக வாழ்வதற்குரிய நல்ல அறிவுரைகள் சொன்னீர்களே. என் இரண்டு கண்மணிகளை தங்களுக்கும் காட்டுமட்டும் பொறுக்கவில்லையே அண்ணா? ஏன் இவ்வளவு அவசரம்? எனது கடமையை நிறைவேற்ற முதல் நீங்கள் மறைந்து விட்டீர்களே! என்ற கவலை என் உள்ளத்தில் எப்போதும் இருக்கிறது அண்ணா. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

**கௌரி ரஞ்சித் (கீதா)**
**கனடா.**

---

- இலட்சியம் மட்டும் உயர்வாக இருந்தால் போதாது, அதனை அடையும் வழியும் உயர்வாக இருக்க வேண்டும்.
- பொறுமை என்பது கசப்பானது ஆனால் அதன் பலனோ பல மடங்கு இனிப்பானது.
- ஆயிரம் நூல்களை பயில்வதை விட ஒரு உயர்ந்த நூலின் படி ஒழுகுதல் மேலானது.
- எந்நேர ஓய்விலும் முன்னேற முயலுக.
- மலையளவு பேச்சை விட கடுகளவு செயலே சிறந்தது.
- ஆணவச்சுமை அபாயப் பள்ளத்தில் அழுத்தும்
- அடுத்தவனை குறைசொல்வது தன் குறைகளை மறைப்பதற்காகவே
- யானையின் பலம் தும்பிக்கை, மனிதனின் பலம் நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதொரு ஆற்றலனே
# சந்திரபாலன்

1. என்இளமைக் காலம்முதல் எம்ஊரில் பள்ளியிலே
ஒன்றிப் பழகிவந்த ஒப்பற்றான் - சென்ற செய்தி
கேட்டுத் துடிதுடித்தேன் சோகத்தில் ஆழ்ந்துபட்ட
பாட்டதனை யார்அறிவர் பார்.

2. காந்தக் கருவிழியன் கட்டழகு மேனியவன்
சாந்த முகம்கொண்ட சாமர்த்தன் - மாந்தர்
போற்ற வழிநடத்தும் பண்பாளன் எம்மர்க்கு
உற்றசந்திர பாலன்என உணர்.

3. சீராளன் நல்ல சிறப்பாளன் எங்களுக்கு
ஏராளம் பாடுபட்ட எழிலாளன் - பேராளன்
அன்பிற்கும் பண்பிற்கும் அறிவிற்கும் இலக்கணமாய்
அன்றுதொட்டு வாழ்ந்தான் அறி.

4. சென்ற இடமெல்லாம் சிறப்பாக ஆங்கிலத்தை
நன்று பயிற்றுவித்த நல்லாசான் - இன்றில்லை
என்று மனம்நொந்து எண்ணிக் கலங்குகின்றார்
நன்றதனை அறிந்திடுவோம் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அன்னையில்லை பிள்ளையில்லை அரவணைக்க மனைவியில்லை
என்னநிலை எதுவரினும் ஏங்காது - அன்புடனே
தொண்ணூறைத் தாண்டிநின்ற தந்தைக்கு சேவைசெய்து
கண்ணாகக் காத்துவந்தான் கனிந்து.

6. எத்தனையோ காலமதாய் எம்மைமிக நேசித்து
ஏற்றபல அறிவுரைகள் ஏராளம் எடுத்தியம்பி
முத்தனைய நற்பணிகள் முன்னின்று முழுமூச்சாய்
முடித்துவைத்து புகழ்பரப்பி பள்ளியிலே நாயகனாய்
எத்தனையோ போட்டிகளில் ஏற்றமுடன் தலைமைதாங்கி
எண்ணற்ற பரிசுகளை எடுத்தசந்திர பாலனினை
உத்தமர்கள் பலர்போற்றி உன்னதத்தைப் பாராட்டி
உவகையுடன் புகழ்பாட ஊர்போற்ற வாழ்ந்தசெம்மல்......

7. மாடுரண்டு முன்செல்ல மனம்மகிழ்ந்து ஏர்பிடித்து
மண்கிளறி அற்புதமாய் பண்படுத்தி பாத்திகட்டி
பாடுபட்டு பயிர்வளர்க்கும் பண்பாளன் தினத்தாளில்
பவ்வியமாய் எடுத்தெழுதி பல்லரிய குறைகளினை
சாடுவதில் நிகரற்றான் சித்தனையைத் தூண்டுகின்ற
சிறப்பான கருத்தாழம் சீர்திருத்தம் மேலும்பல
வீட்டுக்கு மாளிகைகள் விண்ணுயர்ந்த கட்டங்கள்
விதம்விதமாய் அமைத்துவிட்டு விடைபெற்று சென்றனையோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நல்லதொரு ஆற்றலனெ சந்திர - பாலன்
நவமான சிந்தனையில் நவியாச் சீலன்
வல்லஉயிர் கவர்வதற்கு வந்த காலன்
வரவேற்றுச் சென்றனனே விண்ணோர் தேசம்
சொல்லரிய கட்டடங்கள் சொர்க்கம் தன்னில்
சிறப்பாக வடிவமைக்கும் சிந்தை கொண்டு....
வல்லஉனை அழைத்தனனோ விருப்பம் கொண்டு
வார்த்தையிலே நின்இழப்பை வடித்தல் ஆமோ?

9. இப்புவியில் பிறக்கின்ற உயிர்கள் எல்லாம்
இருந்துவாழ்ந்த தில்லை என்ற இயல்பு தன்னை
தப்பின்றி அறிந்துநாமும் தரணி தன்னில்
தா்மங்கள் தளைத்தோங்க தயக்கம் இன்றி
ஒப்பரிய சேவைசெய்து ஒழுங்காய் வாழ்ந்து
ஓதும்நல நூல்பயின்று ஓங்கி நாளும்
செப்பரிய மாவையிறை செந்தாள் போற்றி
சேமமுற வாழ்ந்துமனம் செழிக்கக் கொள்வோம்.

**நண்பன்**
**மாவை சி.கேசவன்**
**திருகோணமலை.**

---

**சிக்கல்கள் என்பவை ஓடும் ரெயிலிலிருந்து பார்க்கும் மரங்களைப் போன்றவை. அருகில் போனால் அவை பெரிதாகத் தெரியும். அவற்றைக் கடந்து சென்றால் அவை சிறிதாகிவிடும். இதுதான் வாழ்க்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணிப்புடன் செயற்பட்ட துணிச்சல் நிறைந்த செம்மனச் செம்மல் அடியோடு சாய்ந்ததோ!!!....

அமரர் பொறியியலாளர் சந்திரபாலனின் மறைவு மிகவும் கவலை தருவதாக உள்ளது. அமரர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாம். என என்மனம் ஏங்குகின்றது. நண்பன் சந்திர பாலனின் பல ஆண்டு கால நட்பு எனக்கு கிடைத்ததையிட்டு பெருமைப்படுகின்றேன். மிகச்சிறந்த மனிதப்பண்புகள் நிறைந்த ஒரு சமூக சேவகன்.

சந்திரபாலனும் நானும் வீமன்காமம் ஆங்கிலப் பாடசாலையில் ஆரம்ப வகுப்பு தொடக்கம் பொதுதராதரப் பரீட்சை வரையும் ஒன்றாக கல்வி பயின்றோம். பாடசாலை வாழ்க்கையில் ஆரம்பித்த எமது இணை பிரியாத நட்பு நண்பனின் மறைவு வரையும் நிலைத்திருந்தது. இவரது நட்பு என்னுடன் மட்டுமல்லாது எனது குடும்பத்தினருடனும் தொடர்ந்தது இவர் எனது பிள்ளைகளுக்கு மிக்க வழிகாட்டியாக திகழ்ந்தார். இப்படியான எனது நண்பன் தனது உயிர்பிரியும் கணத்திலும் என்னை அழைத்தது என்னை வியப்படைய வைத்தது.

அமரர் பாடசாலைப் படிப்பை அடுத்து கட்டிடத்துறையில் சிறப்பு தேர்ச்சி பெற்றார். இவர் கட்டிடக்கலைஞர் அமரர் திரு.வி.எஸ்.துரைராசா அவர்களின் வழிகாட்டலில் இலங்கை பூராகவும் கட்டிடக்கலை பற்றிய தனது துணுக்கங்களை ஒப்பந்தகாரர்களுடன் இணைந்து நெறிப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வாழ்வில் சமூக, சமய கலைகலாச் சாரவிடயங்கள் அனைத்திலும் ஆழமான பற்றுதியுடன் சேவையாற்றினார். வலிகாமம் வடக்கு சனசமூகங்களின் சமாசத்தின் செயலாளராகவும், கடமையாற்றினார். அமரரிடமும் மொழிப்புலமையும் வாசிப்புப் பழக்கமும் மிகுந்து காணப்பட்டது.

ஆங்கில, தமிழ் பத்திரிகைகளில் நாட்டில் எதிர் நோக்கும் பொதுவான சீர்திருத்தங்களைப் பற்றி எழுதிவந்தால் மும் மொழிப் புத்திஜீவிகளுடன் இணைந்து பல கருத்தரங்குகள் பயிற்சிப்பட்டறைகளிலும் பங்குபற்றினார். யாழ் மாவட்ட கைத்தொழில் வர்த்தக அபிவிருத்தி இயக்குனர் சபையின் உறுப்பினராகவும் இருந்து செயலாற்றியுள்ளார்.

எல்லோராலும் மதிக்கப்பட்ட நேசிக்கபட்ட சமூக சேவையாளன் இவர் தனது சமூக சேவைகளுக்கு ஆலோசனை பெறுவதற்காக என்னைத் தேடி எனது வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்வார். இவர் வரும் போது அது நான் சந்திரபாலன் ஆறுமுகம் நிக்கிறீரோ" என்ற வண்ணம் வாசலிற்குள் நுழைவார் இப்போது இந்த ஒலி கேட்கவில்லை என அனைவரும் ஏங்குகின்றோம். வீட்டிற்கு வந்தால் நீண்டநேரமாக அமர்ந்திருந்து தனது அனுபவம் மிக்க பேச்சுக்களை என்னுடனும் என் பிள்ளைகளுடனும் பரிமாறிவிட்டுச் செல்வார். இப்படிப்பட்டவரான திறமையும் நேர்மையுடன் நீதியும் மிக்க மனிதனை எவராலும் மறக்கமுடியாது இப்படியான எனது நண்பனை நாம் மீண்டும் எப்போகாண்போம்!!!

"இவரது ஆத்மா இறைவன் திருவடி சேருமாக"

**கிருஷ்ணர் ஆறுமுகம்,**

**மாவிட்டபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலிவடைந்தோரின் நண்பன்

இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் இலங்கை திருநாட்டின் வடபாகத்தில் அமைந்துள்ள சரித்திர பிரசித்தி பெற்ற மாவிட்டபுர மண்ணில் தந்தை செல்வா அவர்கள் வாழ்ந்த கிராமத்தின் அண்டிய கிராமத்தில் வாழ்ந்த செல்லப்பா வைத்திலிங்கம் என்பவருக்கும் கோப்பாய் கோமான் வன்னியசிங்கமும் சிந்தனைச் சிற்பி கதிரவேல்பிள்ளை ஆகிய தமிழ்த்தலைவர்கள் வாழ்ந்த கோப்பாய் தொகுதியின் உரும்பிராய் எனும் ஊரில் பிறந்த ஆச்சிமுத்து என்ற தெய்வத்தாய்க்கும் சிரேஷ்ட புதல்வனாகப் பிறந்தவர் தான் சந்திரபாலன்.

அமரர் சந்திரபாலன் தன் நலம் கருதாது பொதுநலத்திலேயே அக்கறை உடைணவராக வாழ்ந்தார். இவர் தனது இளமைக் காலத்தில் கல்வி அறிவில் திகழ்ந்து கல்விமானாக வாழ்ந்தவர். ஒரு சந்தர்ப்பத்தில் தானைத் தளபதி அமிர்தலிங்கம் இவரின் கொள்கைப் பற்றினை நேசித்து அரச உத்தியோகத்தை வழங்கியபோதும் தனது கொள்கைக்கும் இப்பெயர்ப்பட்ட உத்தியோகங்கள் ஒத்துவராது என நினைத்து அதனை மறுத்துவிட்டார். தனது தமிழ்பற்றினை வெளிக்காட்டும் உத்தமனாக, அமரத்துவம் அடையும் வரை தமிழ், தமிழ்உணர்வு என்பனவற்றை இருவிழிகளில் ஒரு விழியாகக் கருதிச் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் தன் பணி தன் குடும்பப் பணி என்பனவற்றை இரண்டாம் இடத்தில் ஒதுக்கிவிட்டு தமிழ் மண்ணில் பிறந்த குறிப்பாக வலிகாமம் வடக்கில் சொல்லனாத் துயரத்தில் அல்லல்பட்டுள்ள மக்களின் விருப்பு, வெறுப்பு, துன்ப, துயரங்களில் அதிக அக்கறை உடையவராக செயற்பட்ட உத்தமன் சந்திரபாலன்,

அமரரின் இந்த செயல்பாட்டினை நான் அறிய முடிந்தது எப்படி என்றால் எனது வீட்டில் தனது துவிச்சக்கர வண்டியினைப் பாதுகாப்பாக வைத்துவிட்டு பேரூந்தில் பயணம் செய்வார். எங்கே தினமும் செல்கிறீர்கள் என அவரிடம் வினவியபோது அங்கு அதாவது வலி வடக்கு மக்கள் பலகாலமாகத் தமது உடமைகளை, காணி, பூமிகளை வீடு வாசல்களைப் பறிகொடுத்து பரிதவித்து இருக்கிறார்கள் அவர்களின் குறைந்த பட்ச தேவைகளையாவது என்னால் முடிந்தவரை செய்யவே நான் அங்கு தினமும் ஒடுகின்றேன் என்பார்.

இவர் தனது விடாப்படியான குணங்களினால் குடும்பத்திலேயே பல கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டபோதும் என்மேல் வைத்த அன்பு மதிப்பினாலும் எனத வார்த்தைகளை மதித்து அதற்கிணங்கிச் செயற்பட்டார். அப்படிப்பட்ட மாமனிதன் நாமும் வலிவடக்கு மக்களும் அவர் மறைவால் வருந்துவது போல் அவரின் குடும்பம் படும்துயர துன்பத்தில் அவர்களுடன் சேர்ந்து துக்கத்தில் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மாசாந்தி அடைய அவரின் குலதெய்வமாம் மாவைக் கந்தனை கைகூப்பி இரஞ்சி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி!!! **கு.அம்பிகைபாகன்**

**J/121 கிராம உத்தியோகத்தர்,**

**கொக்குவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய தாயாரின் நினைவில் இருந்து

"சின்னம்மா என்ற வார்த்தையிலேயே பாசம் அத்தனையையும் மரியாதையையும் ஒரு சேர வெளிப்படுத்தும் மகன் சந்திரபாலனே... இத்தனை விரைவாக செல்ல விளைந்ததேனோ! சொந்தங்கள் எம்மை கலங்க வைத்தது ஏனோ? பண்பிற்கு உதாரணமாக வாழந்த பிள்ளை எனக்குப் பெறமகள் என்ற பெருமையுடன் நாளிருந்தேன். எனக்குள்ள கடமைகளில் பங்கேற்று என் மகளுக்கு தந்தையாய் இரந்து கடமை புரிந்து மகனை எந்தத்தாயால் மறக்க முடியும். வவுனியாவில் இருந்து நான் யாழ்ப்பாணம் வந்ததும் தேடி ஓடி வந்து ஆறஅமர இருந்து பலகதைகள் பேசிச் செல்லும் முகம் மறக்கக் கூடியதொன்றோ. என்னை தேடி வந்து பேசும் பிள்ளையுடன் இறுதி நாளில் பேசமுடியாமல் போன துன்பம் என்னை வருத்துகிறது. எத்தனை அழுதாலும் நினைவுகள் மறையாது உனது ஆத்மா சாந்தியடைய உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

**சின்னம்மா வி.சரஸ்வதி.**

**வவுனியா.**

---

இல்லை என்று ஒருபோதும் சொல்லாதே
என்னால் இயலாது என்று ஒரு போதும் எண்ணாதே

சுதந்திரமானவானாக இரு
எவரிடத்திலும் எதையும் எதிர்பார்க்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்களின் நினைவுகளில் சந்திரபாலன்

அண்ணன் என்ற சொல்லிற்கு இலக்கணமாய் தந்தை போலிருந்து எமை பாசத்தோடு நேம் புரிந்த அன்பு நிறைந்த பெரியண்ணா எப்படி உங்கள் இழப்பை ஈடுசெய்ய போகிறோம். கலங்கி நிற்கின்றோம் உங்கள் ஐந்து தங்கைகளும் சிற்றன்னை வயிற்றில் உதித்தவர்கள் என்ற எண்ணம் சிறிதும் தென்படாத உங்கள் பாசமும் பரிவும் என்றும் எம்மைவிட்டு நீங்காது சிறுபராயத்தில் வேலிக்கு மேலால் எம்மைத் தூக்கிச் செல்வது முதல்கொண்டு பெரியவர்களான பின் எம் எல்லோரையும் ஒன்றாக நல்லூர் திருவிழாவிற்கு அழைத்துச் சென்று களிப்புடன் கழித்த நாட்கள் வரை... அம்மம்மா!.... எத்தனை நினைவுகள் அண்ணா! உங்கள் இறுதி நாட்களில் நாம் உங்களுடன் இருக்க முடியாத பாவிகள் ஆகிவிட்டோம் இன்னும் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் எம் அண்ணனாக நீங்கள் பிறக்க வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்.

அன்பின் பாசமிகு அண்ணாவே எங்கள் உறவுப்பந்தியில் உங்களது இடம் வெற்றிடமாகவே உள்ளது. உங்களுக்க நிகர் நீங்களே தான் இனி யார்வந்து அதை நிறைவு செய்ய முடியும்.......

**உங்கள் நினைவுகளில் ஆழ்ந்திருக்கும்,சகோரரிகள்**

**இரா. விஜயகுமாரி, க.சுதா, சு.வசந்தா, அ.கவிதா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏறபட்ட விரிசல்கள் பெரிதாகாமல் இருக்கவும் பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவும்.

- நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை **(Ego)** விடுங்கள்
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள் **( Loose Talks)**
- எந்த விடையத்தையும் பிரச்சினையையும் நாசுக்காக கையாழுங்கள் **(Diplomacy)** விட்டுக்கொடுங்கள் **(Compromise)**
- சில நேரங்களில் சில கங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள் **(Tolerance)**
- நீங்கள் சொன்னதே சரி, செய்வதே சரி என்று வாதாடாதீர்கள் **(Adamant Argument)**
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள் **(Narrow Mindedness)**
- உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள் **(Carrying Talks)**
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கவர்ப்பாடாதீரக்ள் **(Superiority Complex)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அளவுக்கதிகமாய் தேவைக்கு அதிகமாய் ஆசைப்படாதீர்கள் (Over Expectation)
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களிலும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகின்ற எல்லா விடையங்களையும் நம்பிவிடாதீர்கள் பகைவரை நண்பராகக் கருதாதீர்கள்.
- அற்ப விடயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள் பயனில்லாமல் பேசாதீர்கள் .
- உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் ( Flexibihty)
- மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள் (Misunderstanding)
- மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Conrtesy)
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாதது மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்
- முன்பின் தெரியாதவரை நம்பாதீர்கள்
- பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திராமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எங்கள் குடும்பத்தின் திருவிளக்காய் ஒளி வீசி
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எங்கள் இதயக்கோயிலின்
மறைவுச் செய்தி கேட்டு ஓடோடிவந்து ஆறுதல்
கூறியும், உதவிகள் புரிந்தும், ஈமக்கிரிஜைகளில்
கலந்து கொண்டவர்க்கும், உள்ளூர் வெளியூர்களில்
இருந்து அனுதாபச் செய்தி அனுப்பியவர்களிற்கும்,
தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தியினை தெரிவித்தவர்களுக்கும்,
துண்டுப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களிற்கும் இன்னும்
பல வழிகளிலும் துக்கத்தில் பங்கு கொண்டவர்க்கும். அந்தியேட்டி,
வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் கலந்து கொண்டு எம் சகோதரனின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்தித்தவர்களுக்கும், சபீண்டீகரணக் கிரியைகளை
சிறப்புற நடாத்திய அந்தணப்பெரியவர்களிற்கும், இம் மலரினை குறுகிய
காலத்தில் அழகுற அமைத்து வெளியிட ஒத்தாசை புரிந்த
அச்சகத்தினருக்கும், உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்கள்
உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கக் கொள்கிறோம்.

சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரது தேடலில் இருந்து



பிறக்கும்போது தாயை அழவைக்கிறோம்
இறக்கும் போது எல்லோரையும் அழவைக்கிறோம்
வாழும் போதாவது
எல்லோரிடமும் சிரிக்கப்பழகுவோம்.

நீ தனிமையில் இருக்கும் போது உனக்கு
என்ன என்ன தோன்றுகிறதோ
அதுதான் உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும்
வெற்றி என்பது நிரந்தரமல்ல
தோல்வி என்பது இறுதியானதுமல்ல!

ஒருநொடி துணிந்தால் இறந்துவிடலாம்
ஒவ்வொரு நொடியும் துணிந்தால் நாம் ஜெயித்து விடலாம்.

நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன
ஆனால் அனுபவமோ
தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது

சிக்கல்கள் என்பவை ஓடும் ரெயிலிலிருந்து
பார்க்கும் மரங்களைப் போன்றவை. அருகில்
போனால் அவை பெரிதாகத் தெரியும்.
அவற்றைக் கடந்து சென்றால் அவை சிறிதாகிவிடும்.
இதுதான் வாழ்க்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org